# தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம்

## Tamilnadu Judicial Employees Association

# சங்க அமைப்பு விதிகள்

# தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம்
# Tamilnadu Judicial Employees Association

**சங்க அமைப்பு விதிகள் :**

பதிவு எண்.69, அரசாணை எண்.1549 பொது (பணிகள்-ஏ) நாள்: 5-7-67, 1966ம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் நாளன்று கோயம்புத்தூரில் நடந்த பொதுக்குழுக்கூட்டத்தில் இவ்விதிமுறைகள் அங்கீகரிக்கப்பட்டு, பின்னர் அரசாணை எண்.1835 பொது (பணிகள்) துறை, நாள்: 21.11.1960க்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட்டன. அரசுக் கடிதம் எண் 354517/பணியாளர்/கே/934 துறை, நாள்:6.10.1993 இல் விதித்திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்டன. 1997 அக்டோபர் 25 அன்றுகடலூரில் நடந்த மாநிலச் செயற்குழு மற்றும் சென்னையில் 1999 ஜீலை 16,17 தேதிகளில் நடந்த மாநில பிரதிநிதித்துவப் பேரவை மற்றும் 9வது மாநில மாநாட்டில் இப்போதுள்ளவாறு விதிகள் திருத்தி அமைக்கப்பட்டன. மேலும் இவ்விதிகள் 2013-ம் ஆண்டு நவம்பர் 2 மற்றும் 3-ம் தேதி ஈரோடு நகரில் நடைபெற்ற மாநில பிரதிநிதி மாநாட்டில் இப்போதுள்ளவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

**1. அமைப்பு:**

கோயம்புத்தூரில் 09-04-1966 ஆம் நாளன்று நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இச்சங்கம் அமைக்கப்பட்டது.

**2. தலைமையிடம்:**

2 (i) தமிழ்நாட்டின் தலைமையிடமான சென்னையே சங்கத்தின் தலைமையிடமாக இருக்கும்.

2 (ii) வருவாய் மாவட்டத்தின் தலைமையிடம் எதுவோ அதுவே சங்கத்தின் மாவட்ட தலைமையிடமாக இருக்கும்.

**3. சங்கத்தின் நோக்கம்:**

தமிழ்நாடு மாநிலத்தில் இயங்கி வரும் பல்வேறு நீதிமன்றங்களிலும் பணியாற்றி வரும் நீதித்துறை ஊழியர்களிடையே ஒற்றுமை மற்றும் பொதுப் பொறுப்புகள் பற்றிய உணர்வுகளை மேம்படுத்தவும், நீதித்துறை ஊழியர்களின் தேவைகளைக் கண்டறிந்து நிறைவேற்றிடவும் தனியே ஒரு சங்கம் அமைந்திடல் மிகவும் நலம் பயக்கும் என்ற அடிப்படையில் இந்தச் சங்கம் உருவானது.

நீதித்துறையில் பணியாற்றும் உறுப்பினர்களின் பொதுப் பணி மற்றும் பொருளாதார நலன்களை மேம்படுத்துவதே இச்சங்கத்தின் தலையாய நோக்கமாகும்.

**4.சங்க அமைப்பும் உறுப்பினர் சேர்க்கையும்:**

4.( 1 ) தமிழ்நாடு மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய ஒரு மாநில அளவிலான அமைப்பாக இச்சங்கம் இருக்கும் நீதித்துறையில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும் சங்கத்தில் உறுப்பினர்களாகத் தகுதி படைத்தவர்களாவார்கள்.

4.( 2 ) உறுப்பினரால் முதன் முதலில் அளிக்கப்படும் சந்தா, அவரது உறுப்பினர் பதிவை அங்கீகரிப்பதாகும். பின்னர் ஒவ்வோராண்டும் அளிக்கப்படும் சந்தாத் தொகை, பதிவைப் புதுப்பித்தலாகும். ஒருவர், நீதித்துறை ஊழியராக எப்போது இல்லாமல் போகிறாரோ அப்போதே அவரது உறுப்பினர் பதிவும் தானாகவே காலாவதியாகிவிடும்.

ஆனால், எந்த உறுப்பினரும் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டதற்காகப் பழிவாங்கும் வகையில் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டாலோ அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டாலோ, அவர் இயல்பாக ஓய்வுபெறும் நாள்வரை மாநிலச் செயற்குழுவின் ஒப்புதலுடன் சங்கத்தில் உறுப்பினராகத் தொடரலாம்.

4.( 3 ) அரசு ஊழியரல்லா எவரும் சங்கத்தின் நிர்வாகப் பொறுப்புகளில் இருக்க இயலாது.

**சங்கத்தின் சின்னம்:**

4.( 4 ) ஒரு வட்டத்திற்குள் தராசும், இவ்வட்டத்தைச் சுற்றிய வெளிப் பகுதியில் தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம் என்ற வாசகம் வட்ட வடிவில் எழுதப்பெற்று இதைச் சுற்றி மேலும் ஒரு வட்டம் வரையப்பட்டிருக்கும். அதற்குக் கீழே குறுக்காக



சங்கத்தின் கோரிக்கை முழக்கமாக "ஒன்றுபடுவோம் முன்னேறுவோம்" என்று எழுதப்பட்டிருக்கும் இவை நீல நிறப்பிண்ணனியில் வெள்ளை நிறத்தில் எழுதப்பட வேண்டும். இது சங்கத்தின் சின்னமாகும்.

சங்கக் கொடியின் அளவு 3:2 என்ற விகிதத்தில் இருக்கும். நீல நிறத்தில் உள்ள கொடியின் நடுவில் சங்கத்தின் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும்.

**5. உறுப்பினர் சந்தா:**

5.(1) சங்க விதிமுறைகள் 4(1)வது பிரிவின் கீழ் குறிப்பிட்டுள்ளபடி நீதித்துறையில் பணியாற்றும் அனைத்து நீதித்துறை ஊழியர்களும் ஒவ்வொரு ஆண்டும் சந்தாவினைச் செலுத்தி உறுப்பினராக வேண்டும்

5.( 2 ) ஒவ்வொரு உறுப்பினரும் ஆண்டுச் சந்தா ரூ.50/- செலுத்த வேண்டும்.

5.( 3 ) சங்க ஆண்டு என்பது ஜனவரி முதல் தேதியிலிருந்து டிசம்பர் 31 முடிய உள்ள காலமாகும்.

**6. சங்கத்தின் கட்டமைப்பு:**

6.( 1 ) தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம் மாநிலம் முழுவதும் ஒரே தன்மையுடையதாகும்.

6.( 2 )மாநில அளவில் நிர்வாகச் செயல்பாடு என்பது சங்கத்தின் மத்திய செயற்குழுவாலும், மாவட்ட அளவில் நிர்வாகச் செயல்பாடு என்பது மாவட்டச் செயற்குழுவாலும் மேற்கொள்ளப்படும்.

6.( 3 )சங்கத்தின் உயர் அதிகாரம் படைத்த அமைப்பாக மாநிலப் பிரதிநித்துவப் பேரவை இருக்கும்.

**7. மாநில நிர்வாகிகள், மாநில செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில பிரதிநிதித்துவ பேரவை உறுப்பினர்கள்:**

7.(1) மாநில மையத்திற்கு ஒரு மாநிலத் தலைவர். ஒரு துணைத் தலைவர் (நகரம்), நான்கு துணைத் தலைவர்கள் (புறநகர்), ஒரு பொதுச் செயலாளர், ஒரு செயலாளர் (நகரம்), நான்கு செயலாளர்கள் (புறநகர்) ஒரு பொருளாளர் ஆகிய மாநில நிர்வாகிகள் இருப்பார்கள். இவர்கள் இரண்டு ஆண்டு காலம் அல்லது அடுத்த தேர்தல் நடைபெறும் வரை பதவியில் இருப்பார்கள்.

7.(2) மாநில நிர்வாகிகள், மாநில பிரதிநிதித்துவ பேரவை உறுப்பினர்களிலிருந்து, மாநில பிரதிநித்துவ பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

7.(3) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைந்தது இரண்டு மாநில செயற்குழு உறுப்பினர்கள் இருப்பார்கள். மாவட்டத் தலைவர் அல்லது செயலாளரிலிருந்து ஒருவரை மாநில செயற்குழு உறுப்பினராக மாவட்டத் தேர்தலுக்குப் பிறகு கூடும் மாவட்டச் செயற்குழு தேர்ந்தெடுக்க வேண்டும். மற்றொரு மாநில செயற்குழு உறுப்பினரை மாவட்ட உறுப்பினர்களிலிருந்து மாவட்ட பொதுக்குழு தேர்ந்தெடுக்க வேண்டும். இது தவிர 300 உறுப்பினர்களுக்கு மேல் உள்ள மாவட்டங்கள் கூடுதலாக ஒரு மாநில செயற்குழு உறுப்பினரை மாவட்டப் பொதுக் குழுவில் மாவட்ட உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.

7.(4) மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர் விதி எண் 14(2) மற்றும் (3) படி தேர்ந்தெடுக்கப்படுவர்.

**8.மாவட்டக்குழு:**

8.(1) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்டத் தலைவர், மூன்று துணைத் தலைவர்கள், ஒரு செயலாளர், மூன்று இணைச் செயலாளர்கள், ஒரு பொருளாளர் இருப்பார்கள். அவர்கள் அந்தந்த மாவட்டப் பொதுக்குழு உறுப்பினர்களால், மாவட்டப் பொதுக்குழு உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

8.(2) மாவட்டச் செயற்குழுவில் மாவட்ட நிர்வாகிகளும், நீதிமன்றத்திற்கு ஒருவர் வீதம் பொதுக்குழுவில் தேர்வு செய்யப்பட்டவர்களும் மாவட்டச் செயற்குழு உறுப்பினர்களாக இருப்பார்கள். இது தவிர, சார் மைய தலைவரும், செயலாளரும் பதவி முறையில் மாவட்ட செயற்குழு உறுப்பினர்களாவார்கள். சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திலிருந்து மாவட்டச் செயற்குழு உறுப்பினர் ஒருவர் வேறு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டால், அவருக்குப் பதிலாக அந்த நீதி மன்றத்தில் பணியாற்றும் வேறு ஒருவரை மாவட்டச் செயற்குழு இணைத்துக் கொள்ள வேண்டும்.

**கட்டுப்பாடு மற்றும் நடவடிக்கை:**

8(3)(i) சங்கத்தின் எந்த உறுப்பிரும் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ சங்கத்தின் நோக்கங்களுக்கும், நலன்களுக்கும், கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் மற்றும் சங்க விதிகளுக்கும் எதிராகச் செயல்படக் கூடாது.

8(3)(ii) விதி எண்.8(3)(i) ஐ மீறிச் செயல்படும் எந்த ஓர் உறுப்பினரையும் ஓராண்டு காலத்திற்கு மிகாமல் சங்கத்திலிருந்து தற்காலிகமாக நீக்கி வைக்கவோ



அல்லது சங்க உறுப்பினர் பட்டியலிலிருந்து நிரந்தரமாக நீக்கி வைக்கவோ செய்யலாம்.

8(3)(iii) எந்த ஒரு சங்க உறுப்பினர் அல்லது சார் மைய / மாவட்ட நிர்வாகி அல்லது மாநில / மாவட்ட / சார் மைய செயற்குழு உறுப்பினர் அல்லது மாநில பிரதிநிதித்துவ பேரவை உறுப்பினர் பேரிலும் விதி எண். 8(3)(i) இல் கூறப்பட்டுள்ள சங்க விரோத நடவடிக்கை தொடர்பான குற்றச்சாட்டை மாவட்டத்தில் உள்ள ஓர் உறுப்பினர் எழுத்துப்பூர்வமாக அளித்தால், அந்த புகார் மனுவை மாவட்டப் பொதுக்குழு பரிசீலித்து விதி எண்.8(3)(ii) ல் கூறப்பட்டுள்ள தண்டனைகளை குற்றம் சாட்டப்பட்டவர் தன் நிலையை விளக்கிட நியாயமான வாய்ப்பளித்து வழங்கிடலாம். காலியாகும் பதவிக்கு தொடர்புள்ள செயற்குழு தகுதியானவரை இணைத்துக் கொள்ள வேண்டும்.

8(3)(iv) விதி எண்.8(3)(i) இல் கூறப்பட்டுள்ள கட்டுப்பாட்டை மீறிச் செயல்படும் மாநில நிர்வாகி மீது அவர் தன் நிலையை விளக்கிட, நியாயமான வாய்ப்பை அளித்து, விதி எண்.8(3)(ii) இல் கூறப்பட்டுள்ள தண்டனையை மாநில செயற்குழு வழங்கிடலாம். காலியாகும் பதவிக்கு மாநில செயற்குழு உறுப்பினர்களிலிருந்து ஒருவரை மாநில செயற்குழு இணைத்துக் கொள்ளலாம். இந்த நடவடிக்கை அடுத்து நடக்கும் மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் பின் ஏற்புப் பெற வேண்டும்.

8(3)(v) விதி எண்.8(3)(iii) இன்படி மாவட்ட பொதுக்குழு வழங்கிய தண்டனையை எதிர்த்து தண்டனை கிடைத்த 15 தினங்களுக்குள் மாநில செயற்குழுவிற்கு மேல் முறையீடு செய்யலாம். மேல் முறையீடு கிடைத்த 3 மாதங்களுக்குள் மாவட்ட செயற்குழுவின் கருத்துக்களை எழுத்துப்பூர்வமாக பெற்று மேல் முறையீட்டின் மீது மாநில செயற்குழு தன் முடிவை அறிவிக்க வேண்டும். மாநில செயற்குழு முடிவே இறுதியானதாகும்.

8(3)(vi) விதி எண்.8(3)(iv) இன்படி மாநில செயற்குழு வழங்கிய தண்டனையை எதிர்த்து மாநில பிரதிநிதித்துவ பேரவைக்கு தண்டனை கிடைத்த 15 தினங்களுக்குள் இரண்டாம் மேல் முறையீடு செய்யலாம். மாநில செயற்குழு இதன் மீது அறிக்கையுடன், அடுத்து நடக்கும் மாநில பிரதிநிதித்துவ பேரவையில் பரிசீலனைக்கு வைக்க வேண்டும். மாநில பிரதிநிதித்துவ பேரவையின் முடிவே இறுதியானதாகும்.

8(3)(vii) விதி 8(3)(i)ல் விளக்கப்பட்டுள்ள சங்கக் கட்டுப்பாடுகளை எந்த மாவட்டக் குழுவும் மீறிச் செயல்பட்டால் மாநிலச் செயற்குழு அந்த மாவட்டக்குழுவைக் கலைத்து விட்டு அந்த மாவட்டத்தில் அன்றாடப் பணிகளை

நிறைவேற்றிட ஒரு தற்காலிகக் குழுவை நியமிக்கலாம். கலைக்கப்பட்ட நான்கு மாதங்களுக்குள் புதிதாகத் தேர்தல் நடத்திட மாநிலச் செயற்குழு ஏற்பாடு செய்திட வேண்டும்.

**9.சார் மையம்:**

9(1) மாவட்ட மையங்கள், சார் மையங்களை மாவட்ட நிலைக்கேற்ப அதற்கான இடங்களைத் தேர்ந்தெடுத்து அமைத்திடலாம்.

9(2) இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சார் மைய செயற்குழுவிற்கு சார் மையத்தில் உள்ள ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் ஒரு செயற்குழு உறுப்பினர் வீதம் குறைந்தபட்சம் 6 உறுப்பினர்கள் சார் மையப் பொதுக்குழுவில் தேர்ந்தெடுக்க வேண்டும். தேவைப்படின், கூடுதல் உறுப்பினர்கள் தேர்வு செய்திட மாவட்டச் செயற்குழு ஒப்புதல் பெற வேண்டும். சார் மையச் செயற்குழு உறுப்பினர் யாரும் இடையில் இட மாற்றம் செய்யப்பட்டால், காலியான இடத்திற்கு அந்த நீதிமன்றத்தில் இருந்து வேறு ஓர் உறுப்பினரை சார் மையச் செயற்குழு இணைத்துக் கொள்ளலாம்.

9(3) ஒவ்வொரு சார் மையத்திற்கும் ஒரு தலைவர், ஒரு துணைத் தலைவர், ஒரு செயலாளர், ஒரு பொருளாளர் ஆகியோர் சார் மைய உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட வேண்டும்.

9(4) சார் மையங்கள் அதன் வரையறைக்குட்பட்ட இடங்களில் உள்ள நீதிமன்றத்தில் பணியாற்றும் உறுப்பினர்களிடமிருந்து ஆண்டு உறுப்பினர் சந்தாவை வசூல் செய்து, 20 சதவீதத் தொகையை தங்கள் மையங்களுக்கு இருத்திக்கொண்டு, மீதித் தொகையை மாவட்ட மையத்திற்கு அனுப்பிட வேண்டும்.

9(5) சார் மையம், மாவட்ட மையத்தின் ஒரு பகுதியாகவே செயல்படும். சார் மையத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பணியாற்றும் ஊழியர்கள் விஷயங்களை விவாதித்து, தீர்மானங்களை நிறைவேற்றி மாவட்ட மையத்திற்கு அல்லது மாவட்ட பொதுக்குழுவிற்கு விவாதத்திற்காக அனுப்பி வைக்கும். மேலும் மாநில பிரதிநிதித்துவ பேரவை, மாநில, மாவட்ட செயற்குழு, மாவட்ட மற்றும் சார் மையப் பொதுக்குழு முடிவுகளை அமல்படுத்த வேண்டும்.

9(6) மாவட்ட நிர்வாகிகள், சார் மையத்தின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டை பெற்றிருப்பார்கள்.



**10.தேர்தல் விதிமுறைகள்:**

தேர்தல் நடைமுறைகள் :

10(i) மாவட்டங்களில் தேர்தல் இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை, தேர்தல் ஆண்டில் மார்ச் மாதத்திற்குள் நடத்தி முடித்திட வேண்டும். தேர்தல் ஆணையரை மாவட்டச் செயற்குழு நியமிக்க வேண்டும்.

அவர் தேர்தலுக்கான கால அட்டவணையை வெளியிட்டு, உறுப்பினர்களுக்கு முன் கூட்டியே அறிவிக்கப்பட்ட ஒரு தேதியில் ரகசிய வாக்கெடுப்பு மூலம் மாவட்ட நிர்வாகிகள், மாநில / மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில பிரதிநிதித்துவ பேரவை உறுப்பினர்களுக்கான தேர்தலை நடத்த வேண்டும்.

10.1.(i)மாவட்ட தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்பாக மாவட்ட உறுப்பினர் பட்டியலை மாநில மையத்திற்கு விகிதாச்சார தொகையுடன் மாநில பொது செயலாளர் முகவரிக்கு அனுப்பி மாநில மைய ஒப்புதல் பெற வேண்டும். அவ்வாறு ஒப்புதல் பெறப்பட்ட பட்டியல் கொண்டே மாவட்ட நிர்வாகிகள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

10(2) உறுப்பினர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிமன்றங்கள் இயங்கும் இடத்தில் ஒரு வாக்குச் சாவடி அமைக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

10(3) இந்தத் தேர்தலுக்கு அடுத்து உடன் கூடும் மாவட்ட செயற்குழுவில் விதி எண்.7(3)-இன் படி மாவட்ட தலைவர் / செயலாளர் ஆகியோர்களில் ஒருவரை மாநில செயற்குழு உறுப்பினராக தேர்வு செய்ய வேண்டும்.

10(iv) மாவட்ட நிர்வாகிகள், மாநில செயற்குழு உறுப்பினர்கள் மாநில பிரதிநிதித்துவ பேரவை உறுப்பினர்கள் எவரேனும் மாநில நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டுவிட்டால், அதன் மூலம் காலியாகும் பதவிக்கு வேறு ஒருவரை தொடர்புள்ள மாவட்ட செயற்குழு இணைத்துக் கொள்ள வேண்டும்.

10(iv) (i) மாவட்ட நிர்வாகிகள் எவர் ஒருவரும் மாநில நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டால் உடன் மாவட்ட பொறுப்பை ராஜினாமா செய்ய வேண்டும் மாநில நிர்வாகி பொறுப்பை ராஜினாமா செய்யாமல் மீண்டும் மாவட்ட பொறுப்பை ஏற்க கூடாது. ஒரே நேரத்தில் ஒருவர் ஒரு பொறுப்பை மட்டுமே வகிக்க வேண்டும்.

10(V) இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அனைத்து மாவட்ட தேர்தல்கள் முடிவுற்ற பிறகு, தேர்தல் ஆண்டின் ஜீன் மாத இறுதிக்குள் மாநில பிரதிநிதித்துவ பேரவையில் மாநில பிரதிநிதித்துவ பேரவை உறுப்பினர்களிலிருந்து மாநில நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் போட்டி இருப்பின் அங்கேயே ஆணையரை நியமித்து ரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்தல் நடைபெற வேண்டும்.

10(V)(i) இரண்டு ஆண்டுகள் தொடர்ந்தால் போல் உறுப்பினர் விகிதாச்சார சந்தா செலுத்தியர்கள் மட்டுமே மாநில நிர்வாகிகள் தேர்தலில் போட்டியிடவோ, வாக்கு அளிக்கவோ தகுதி படைத்தவர் ஆவார்.

10(V)(ii) மாநில நிர்வாகிகள் தேர்தலில் போட்டியிடுபவர் பதவிகாலமான இரண்டு ஆண்டுகள் அரசு பணி புரிய வயதுடையவராக இருத்தல் அவசியமானது ஆகும்.

**10.(Vi) பதவிக்காலம்:**

சார் மைய / மாவட்ட / மாநில நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், மாநில பிரதிநிதித்துவ பேரவை உறுப்பினர்கள் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகளாகும்.

**11. மத்திய சங்கத்தின் நிர்வாகம்:**

**மாநிலத்தலைவர்:**

11.1 (1) மாநிலம் முழுவதும் சங்கத்தின் பொதுவான நடவடிக்கைகளை பார்த்துக் கொண்டு சங்கத்தின் ஒருங்கிணைப்பாளராக இருப்பார். அவை மாநில பிரதிநிதித்துவப் பேரவை மற்றும் மத்திய செயற்குழுவினை தலைமையேற்று நடத்துவார். மாநில செயற்குழு முடிவுகளை நடைமுறைப்படுத்துவார். மாநில பொதுச்செயலாளரின் செலவுப் பட்டியல்களுக்கு ஒப்புதல் அளிப்பார்.

11.1 (2) சங்கத்தின் நலன்களுக்காக சங்கத்தின் பெயரில் இவர் எல்லோருடனும் கடிதப்போக்குவரத்தை மேற்கொள்வார்.

11.1 (3) மாநில நிர்வாகிகள் முடிவுகளுக்கேற்ப சங்க நடவடிக்கைகளுக்காக மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்வார்.

11.1 (4) சங்கத்தின் நிதிநிலைமைக்கு பொதுச் செயலாளர் மற்றும் பொருளாளருடன் இணைந்து மாநிலத் தலைவரும் பொறுப்பாவார்.



11.1 (5) சங்த்தின் சார்பாக வழக்குகளை மாநிலத் தலைவர் தாக்கல் செய்து நடத்துவார். சங்கத்தின் மீதான வழக்குகள் தலைவர் பெயரில் மாநில மையம் இயங்கும் இடம் எந்த உரிமையியல் நீதிமன்ற எல்லைக்குள் வருகிறதோ அந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

**11.2 மாநிலத் துணைத் தலைவர் (நகர்):**

இவர், மாநிலத் தலைவர் இல்லாத சமயங்களில் மத்திய செயற்குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார் மற்றும் மாநிலத் தலைவரின் கடமைகளுக்கு துணை செய்து வருவார்.

**11.3 மாநிலத் துணைத் தலைவர்கள் (புறநகர்):**

இவர்கள் மாநிலத் தலைவரின் பொறுப்புகளுக்கு துணையாக செயல்படுவார்கள். மாநிலத் தலைவர் மற்றும் மாநிலத் துணைத் தலைவர்(நகர்) இல்லாத சமயங்களில், நிர்வாகிகள் தேர்வு செய்யும் துணை தலைவர் மாநில பிரதிநிதித்துவ பேரவை மற்றும் மாநிலச் செயற்குழுக் கூட்டத்திற்குத் தலைமையேற்று நடத்துவார்.

**11.4 மாநில பொதுச் செயலாளர்:**

11.4 (1) சங்கத்தால் அனுப்பப்படும் அனைத்து கடிதப் போக்குவரத்திற்கும் இவர் பொறுப்பாவார். இவர் மாநிலத் தலைவருடன் கலந்தாலோசித்து குறிப்பிட்ட காலமுறை இடைவெளியில் மத்திய செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டுவார், மாநில பிரதிநிதித்துவ பேரவை, மாநில மாநாடுகளை கூட்டுவார்.

111.4 (2) பொதுச்செயலாளர் செய்யும் செலவுகளைத் தவிர மற்ற அனைத்து செலவுக்கான பட்டியல்களுக்கும் பொதுச் செயலாளர் ஒப்புதல் அளிக்க வேண்டும். அவர் செய்யும் செலவு பட்டியல்களுக்கு மாநிலத் தலைவர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

11.4 (3) இவர் அனைத்துக் கூட்டங்களின் நடவடிக்கைகளுக்கும், நிகழ்ச்சிக் குறிப்பேடுகளுக்கும் பொறுப்பாவார்.

**11.5 மாநில செயலாளர்கள்:**

இவர்கள் மாநிப் பொதுச் செயலாளருக்கு சங்கத்தின் பொது நிர்வாக நடைமுறைகளில் துணைபுரிவார்கள் பொதுச் செயலாளர் இல்லாத நிலையில் நிர்வாகிகள் முடிவு செய்யும் மாநில செயலர், பொதுச் செயலாளர் பணிகளைச் செய்வார்.

**11.6 மாநிலப் பொருளாளர்:**

11.6(1) இவர் மாநில மையத்தின் நிதி நிலைக்குப் பொறுப்பாவார்.

11.6(2) இவர் மாநிலத் தலைவர் மற்றும் மாநிலப் பொதுச் செயலாளர் அங்கீகரித்த சங்கத்தின் வரவு செலவு கணக்குகளைப் பராமரித்து வருவார். தணிக்கை செய்த வரவு செலவு கணக்குகளை மாநில பிரதிநிதித்துவ பேரவையில் வைத்து ஒப்புதல் பெறவேண்டும்.

11.6(3) சங்கத்தின் வங்கிக் கணக்கு மாநிலத் தலைவர் மற்றும் மாநிலப் பொருளாளரால் கூட்டாக இயக்கப்படும்.

11.6(4) சங்கத்தின் நிதி என்பது, உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்படும் சந்தாத் தொகை, நன்கொடை மற்றும் அரசிடமிருந்து ஏதேனும் மான்யம் வந்தால் அத்தொகை ஆகியவை மட்டுமேயாகும். இவை சங்கத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படும்.

11.6(5) மாநிலப் பொருளாளர் வரவு செலவு கணக்கு தொடர்பான புத்தகங்கள், செலவு ரசீதுகள், வங்கி கணக்கு புத்தககங்கள் போன்ற ஆவணங்கள் அனைத்தையும் பராமரித்து வர வேண்டும்.

**12. மாவட்ட சங்கத்தின் நிர்வாகம்:**

12.1 மாவட்ட செயற்குழு மாவட்ட மையத்தை நிர்வகிக்கும் மாவட்ட மையத்தின் நிதி ஆதாரம் உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஆண்டுச் சந்தாவில் 30 சதவீதமும், நன்கொடையுமாகும். உறுப்பினரின் ஆண்டுச் சந்தாவில் 50 சதவீதம் மாநில மையத்திற்குச் செலுத்தப்பட வேண்டும்.

**12.2 மாவட்டத் தலைவர்:**

இவர் மாவட்டச் செயற்குழு மற்றும் மாவட்ட பொதுக்குழு கூட்டங்களுக்கு தலைமை ஏற்பார். சக மாவட்டப் பொறுப்பாளர்களுக்கும் பணிகளைப் பரித்தளித்து மாவட்ட மையத்தின் செயல்பாடுகளை இவர் ஒருங்கிணைப்பார். மாவட்டச் செயலாளரின் செலவுப் பட்டியல்களுக்கு ஒப்பளிப்பார்.

**12.3. மாவட்டத் துணைத் தலைவர்கள்:**

இவர்கள் மாவட்டத் தலைவருக்கு துணைபுரிவார்கள் மாவட்டத் தலைவர் இல்லாத போது நிர்வாகிகள் நிர்ணயிக்கும் து.தலைவர் மாவட்டச் செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவார்.



**12.4. மாவட்டச் செயலாளர்:**

இவர் மாவட்டத் தலைவருடன் கலந்தாலோசித்து அவ்வப்போது மாவட்டச் செயற்குழு மற்றும் பொதுக்குழுவைக் கூட்டுவார். சங்கத்தின் கடிதப் போக்குவரத்தையும் கையாள்வார். சங்கத்தின் நடவடிக்கைக் குறிப்பேடுகள் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களுக்கும் இவரே பொறுப்பாவார்.

மாவட்டச் செயலாளர் அவர் செய்யும் செலவுகளைத் தவிர அனைத்து செலவு பட்டியல்களையும் சரிபார்த்து ஒப்புதல் அளிக்க வேண்டும். இவர் செய்யும் செலவு பட்டியல்களுக்கு மாவட்டத் தலைவர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

**12.5 மாவட்ட இணைச் செயலாளர்கள்:**

இவர்கள் மாவட்ட செயலர் பணிகளுக்குத் துணைபுரிவார்கள்.

**12.6 மாவட்டப் பொருளாளர்:**

இவர் உறுப்பினர்களிடமிருந்து வசூல் செய்யப்படும் ஆண்டுச் சந்தா மற்றும் நன்கொடைக்குப் பொறுப்பாவார். சங்கத்தின் வரவு செலவுக் கணக்குகளைப் பராமரிப்பார். மாவட்ட மைய வங்கிக் கணக்கு மாவட்டத் தலைவர் மற்றும் பொருளாளர் ஆகிய இருவராலும் கூட்டாக இயக்கப்படும் மாவட்டப் பொதுக்குழுவில் மாவட்டப் பொருளாளர் ஆண்டு வரவு செலவுக் கணக்குகளைச் சமர்ப்பித்து ஒப்புதல் பெறவேண்டும்.

**13. மத்திய செயற்குழு உறுப்பினர்கள்:**

மாநில மையத்திற்கும் மாவட்ட மையத்திற்குமிடையே இவர்கள் ஒரு பாலமாகச் செயல்படுவர். மாநில செயற்குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டு விவாதப் பொருள் மீது தத்தம் மாவட்டங்களின் கருத்துக்களை எடுத்துரைப்பதே இவர்களது முக்கிய வேலையாகும். இது போல் மாநில மையத்தின் முடிவுகளை மாவட்டங்களில் இதர மாவட்டப் பொறுப்பாளர்களுடன் இணைந்து செயல்படுத்துவர்.

**14. மாநிலப் பிரதிநிதித்துவ பேரவை உறுப்பினர்கள்:**

14(1) மாநிலப் பிரதிநிதித்துவ பேரவை சங்கத்தின் உயர் அதிகாரம் படைத்த உச்ச அமைப்பாகும். இதில் மாநில நிர்வாகிகள், மாநில செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் விதி எண்.14(2) மற்றும் (3) ன் படி தேர்வு செய்யப்படும் மாநிலப் பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள் அடங்குவர்.

14(2) மாநிலம் முழுவதும் சங்கத்தில் உள்ள மொத்த உறுப்பினர்களையும்

மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மொத்த உறுப்பினர்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு மாவட்டங்களில் தேர்தல் நடக்கும் காலத்திற்கு முன்பு ஒவ்வொரு மாவட்டமும் தேர்வு செய்ய வேண்டிய மாநில பிரதிநிதித்துவ பேரவை உறுப்பினர்கள் எண்ணிக்கையை மாநில செயற்குழு அறிவிக்க வேண்டும்.

14(3) மாவட்டங்களில் மாவட்ட நிர்வாகிகள், மாநில மாவட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கான தேர்தலின் போதே மாநில பிரதிநிதித்துவ பேரவை உறுப்பினர்களையும் தேர்வு செய்திட வேண்டும்.

14(4) சங்கத்தின் கொள்கைகளையும், திட்டங்களையும் மாநில பிரதிநிதித்துவ பேரவை வகுக்கும். மாநில மையத்தின் வருடாந்திர அறிக்கை தணிக்கை செய்யப்பட்ட வருடாந்திர வரவு செலவு கணக்கு ஆகியவைகளுக்கு இது ஒப்புதல்அளிக்கும். இப்பேரவை குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டும். பிரத்தியேகமான சூழ்நிலை ஏதேனும் ஏற்படின், பத்து நாட்கள் முன் அறிவிப்பு கொடுத்து பேரவை கூட்டப்படலாம்.

14(5) மாநில பிரதிநிதித்துவ பேரவை சங்க அமைப்பு விதிகளுக்கு திருத்தங்களை பரிசீலித்து ஒப்புதல் வழங்கும்.

14(6) மாநில நிர்வாகிகளை மாநில பிரதிநிதித்துவ பேரவை உறுப்பினர்களிலிருந்து இப்பேரவை தேர்ந்தெடுக்கும்.

14(7) 50%க்கு மேற்பட்ட மாநில பிரதிநிதித்துவ பேரவை உறுப்பினர்கள் இப்பேரவையை கூட்ட வேண்டுமென எழுத்துப் பூர்வமாக கேட்டுக் கொண்டால் தகவல் கிடைத்த ஒருமாத காலத்தில் 10 நாள் முன்னறிவிப்புடன் மாநில பிரதிநிதித்துவ பேரவையை மாநில மையம் கூட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்.

**15.பயணப்படி:**

15.(1) பயணங்களின் போது நிர்வாகிகள் சங்கத்தின் நிதியை முக்கியமான செலவுகளுக்கு மட்டுமே செலவிடுவது என்பதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

15.(2) சங்க விஷயமாக பயணம் செய்யும்போது ஏற்படக்கூடிய செலவுகளை மத்திய செயற்குழு உறுப்பினர் உட்பட அனைத்து உறுப்பினர்களுக்கும் மாவட்ட மைய நிதியிலிருந்து தர வேண்டும்.

15.(3) மாநில நிர்வாகிகள் மாவட்டங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்தால் அந்த மாவட்ட சங்கத்தால் அவர்களது பயணப்படி ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.



**16.தணிக்கை:**

மத்தியக் கமிட்டியின் கணக்குகள் ஆண்டுக்கு ஒருமுறை மத்திய செயற்குழுவால் அமர்த்தப்படும் தணிக்கையாளரால் ஆய்வு செய்யப்பட்டு ஒப்பளிக்கப்பட வேண்டும்.

**17. கூட்டங்கள்:**

**17.1 மாநிலச் செயற்குழு மற்றும் பிரதிநிதித்துவ பேரவை:**

17.1 (1) மத்தியச் செயற்குழு கூட்டம் குறைந்தது 3 மாதங்களுக்கொரு முறை மற்றும் தேவை ஏற்படின் கூட்டப்படும்.

17.1 (2) மாநிலப் பிரதிநிதித்துவ பேரவை குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட வேண்டும்.

17.1 (3) மாநில மாநாடு ஈராண்டுகளுக்கு ஒருமுறை மத்திய செயற்குழுவால் தேர்வு செய்யப்படும் இடத்தில் நடத்தப்படும்.

17.1 (4) பொதுவாக, மத்திய செயற்குழு மற்றும் பேரவைக் கூட்டம் 15 நாட்கள் அறிவிப்பு கொடுத்து கூட்டப்படும். மத்தியச் செயற்குழு அவசரமாக கூட்டப்பட வேண்டியிருப்பின் மூன்று நாட்கள் கால அவகாசம் போதுமானது.

**17.2 மாவட்டக்குழு:**

17.2 (1) மாவட்டச் செயற்குழுக் கூட்டம் குறைந்தது இரு மாதத்திற்கு ஒருமுறை அல்லது தேவை ஏற்படின் கூட்டப்படும்.

17.2 (2) மாவட்டப் பொதுக்குழுக் கூட்டம் குறைந்தது ஆறு மாதங்களுக்கொரு முறை அல்லது தேவை ஏற்படின் கூட்டப்படும்.

17.2 (3) பொதுவாக மாவட்ட செயற்குழுக் கூட்டம் 7 நாட்கள் அறிவிப்பு கொடுத்து கூட்டப்படலாம். அவசரமாக கூட்டப்பட வேண்டியிருப்பின் தகவல் தருவது போதுமானது. மாவட்டப் பொதுக்குழுக் கூட்டத்திற்கு 10 நாட்கள் அறிவிப்பு கொடுக்கப்பட வேண்டும். அவசரமாகக் கூட்டப்பட வேண்டியிருப்பின் தகவல் தருவது போதுமானது.

**18. கூட்டம் நடத்திடதேவையான குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை:**

18.1 (1) மாநில செயற்குழுக் கூட்டக்குறைவெண் மொத்த உறுப்பினர்களில் 60% ஆகும்.

18.1 (2) மாநில செயற்குழு உறுப்பினர் யாரும் தொடரந்து மூன்று கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை என்றால் அவர் மாநில செயற்குழு உறுப்பினராக பதவி வகிக்கும் தகுதியை இழப்பார்கள் பதவி இழந்தவர் அளிக்கும் நியாயமான காரணங்களைப் பரிசீலித்து அவர் பதவியில் தொடர மாநில செயற்குழு அனுமதிக்கலாம். அப்படி இல்லையென்றால் காலியான பதவிக்கு தொடர்புள்ள மாவட்டச் செயற்குழு வேறு ஒருவரை இணைத்துக் கொள்ள வேண்டும்.

18.1 (3) மாநில பிரதிநிதித்துவ பேரவை கூட்டத்திற்கு கூட்டக் குறைவெண் மொத்த உறுப்பினர்களில் 60% ஆகும்.

**18.2 மாவட்டக்குழு:**

18.2 (1) மாவட்டச் செயற்குழுக் கூட்டத்திற்கு மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களாவது குறைந்தபட்சம் இருக்க வேண்டும்.

18.2 (2) மாவட்டப் பொதுக்குழுக் கூட்டத்திற்கு குறைந்தது 25 பேர் இருக்க வேண்டும்.

18.2 (3) மாவட்டப் பொதுக்குழுவைக் கூட்ட வேண்டும் என்று மாவட்டத் தலைவருக்கு 25 பேர் சேர்ந்து ஒரு வேண்டுகோள் விடுத்தால், மாவட்டப் பொதுக்குழுக் கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

18.2 (4) மாவட்டச் செயற்குழு உறுப்பினர் மூன்று மாவட்டக்குழு கூட்டங்களுக்கு தொடர்ந்து வராவிடில், அவர் அந்த உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீங்கியதாகக் கருதப்படுவார். பதவி இழந்தவர் அளிக்கும் நியாயமான காரணங்களை பரிசீலித்து அவர் பதவியில் தொடர மாவட்ட செயற்குழு அனுமதிக்கலாம் இல்லையெனில் மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் மீதமுள்ள காலத்திற்கு வேறொருவர் இணைத்துக் கொள்ளப்படுவார்.

**19. பொதுவான அம்சங்கள்:**

19.1. மாநிலப் பிரதிநிதித்துவப் பேரவைச் சங்கத்தை சிறப்பாகவும், கட்டுக்கோப்பாகவும் நடத்திச் செல்வதற்கு தேவையான விதிகளை சேர்த்துக்கொள்ளலாம்.

19.2. மேலும் அரசாணை உண் 1835, பொது (பணிகள்) துறை நாள் 21-11-1960 இல் கேட்டுக் கொண்டுள்ளபடி, பொதுவான சில நிபந்தனைகளும் ஷரத்துக்களும் கீழ்க்கண்டவாறு சேர்க்கப்படுகின்றன.



19.2.(1) சங்க உறுப்பினர்களின் நலன்கள் சம்பந்தப்படாத எந்த விஷயம் குறித்தும் சங்கத்தின் மூலமாக, பிரதிநிதித்துவமோ, முறையீடோ அனுப்பக் கூடாது.

19.2.(2)சங்கம், பணி நிலைமைகள் தொடர்பாக, தனிப்பட்ட அரசு ஊழியர் எவரையும் ஆதரித்து செயல்படக் கூடாது.

19.2.(3)சங்கத்தின் அனைத்து பிரதிநிதித்துவங்களும் உரிய வழியாக, அதாவது சென்னை உயர்நீதிமன்றம் பதிவாளர் வழியாக, பணிந்தனுப்பப்பட வேண்டும்.

19.2. (4)ஒவ்வொரு ஆண்டும் ஜீலை 1-ஆம் தேதிக்கு முன்னால் சேரும் வகையில் ஆண்டு பிரதிநிதித்துவப் பேரவைக் கூட்டத்தை நடத்தியபின், சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், விதிமுறைகள் மற்றும் தணிக்கை செய்யப்பட்ட கணக்கின் பட்டியல் ஆகியவற்றை உரிய வழியாக அரசுக்கு அனுப்பி வைத்திட வேண்டும்.

19.2.(5)சங்க விதிமுறைகளில் முக்கியமான, அடிப்படையான திருத்தங்கள் ஏதேனும் செய்யப்படின், அதனை அரசின் முன் ஒப்பளிப்பு பெற்றே செய்திட வேண்டும். திருத்தங்கள் ஏதும் செய்யப்பட்டுவிட்டால், அதனை அரசுக்கு தகவலுக்காக சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர் வழியே அனுப்பி வைக்க வேண்டும்.

19.2.(6)சங்கம், ஏதேனும் சங்கத்துடன் இணைந்திட விரும்பினால் அரசின் முன் அனுமதி பெற வேண்டும்.

19.2.(7)சங்கம், வேறொறு சங்கத்துடன் இணைந்து செயல்படும் சமயத்தில் அந்த பொது சங்கத்திற்கு அரசு அங்கீகாரத்தைத் திரும்பப் பெற்றுவிட்டால், இந்த சங்கமும் அதிலிருந்து இணைக்கப்பட்டமை நீங்கிவிடும்.

19.2.(8)சங்கம், 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகளுக்குப் புறம்பாக, அதிலும் குறிப்பாக விதிகள் 5,6,10,11,12,18 ஆகிய பிரிவுகளுக்குப் புறம்பாக எந்தச் செய்கையையும் செய்திடக் கூடாது, அவ்வாறு செய்பவர்களுக்கு உதவிடவும் கூடாது.

19.2.(9)சங்கத்தின் சார்பாக அரசுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் மிகவும் பணிவான, மற்றும் மரியாதைக்குரிய வாசகங்களுடன் எழுதப்பட வேண்டும். முறையற்ற வாசகங்கள் உபயோகப்படுத்தக் கூடாது.

19.2.(10) சங்கம், அரசின் அனுமதியின்றி, சங்க நடவடிக்கைகளை பத்திரிக்கைகளுக்கு வெளிப்படுத்தக் கூடாது.

19.2.(11) மாண்புமிகு அமைச்சருக்கோ, மாண்புமிகு உயர்நீதி மன்றத்திற்கோ, அரசுக்கோ அனுப்பப்படும் கோரிக்கை மனுக்கள் அனைத்தும் மாநிலத் தலைவரால் மற்றும் மாநிலப் பொதுச் செயலாளரால் கையெழுத்திட்டு உயர்நீதி மன்றத்தின் மூலமாகவே அனுப்பப்பட வேண்டும்.

**20. சகோதர சங்கத்துடன் இணைப்பு:**

20.1 சங்கம், சங்கத்தின் நலன் கருதி மற்ற சகோதர சங்கங்களுடன் இணைப்பு ஏற்படுத்திக் கொள்ள செயற்குழுவிற்கு அதிகாரம் உண்டு. ஆனால், இதனை விதி 19.2 (6)க்குப் புறம்பாக அதாவது அரசின் முன் அனுமதியின்றி செய்திடக் கூடாது.

20.2. சங்கம், அரசாணை எண்.1835 பொது (பணிகள்) துறை நாள் : 21-11-1960இல் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு நடத்தப்பட வேண்டும். அரசுக்கு எப்போதும் விசுவாசமாக, உண்மையாக இருத்திட வேண்டும். 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகளின் ஷரத்துக்களுக்குப் புறம்பாக எந்தச் செய்கையையும் செய்திடக் கூடாது, செய்பவர்களுக்கு உதவிடவும் கூடாது.

20.3. சங்கத்தை நடத்திச் செல்லும்போது கீழ்க்கண்ட கொள்கையையும் வழிகாட்டும் கொள்கையாக சங்கம் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதாவது சங்கத்தின் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு அரசுக்கெதிராக வேலை நிறுத்தம் அல்லது வேலை நிறுத்தம் செய்திடுவோம் என்கிற மிரட்டல் எதனையும் சங்கம், எந்தக் காலத்திலும் கடைப்பிடிக்காது.

**ப்பி. கருணாகரன்**
மாநிலத் தலைவர்

**சி. இராகுலன்**
மாநிலப் பொதுச் செயலாளர்

❖